கடற்கரை மற்றும் நாகூர் தர்கா போன்ற பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளினுடைய வருகை நாள்தோறும் அதிகரித்து வருகிறது எனவும், சிறப்புவாய்ந்த தலமாக இருக்கின்ற காரணத்தினால், சுற்றுலாப் பயணிகளும் மற்றும் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களும் இந்தப் பகுதிக்கு அதிகமாக வந்து கொண்டிருக்கின்றார்கள் எனவும் தெரிவித்தார். அவர்களின் வருகையையொட்டி மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னிடம் விண்ணப்பித்திருக்கிறார்கள். அவருடைய விண்ணப்பங்கள் அனைத்தும் முறையாக, துறை ரீதியாக ஆணையர் மற்றும் செயலர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் நிதிநிலைமைக்கேற்ப நிச்சயம் பரிசீலிக்கப்படும், நிறைவேற்றித் தரப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி

***69243—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளா மற்றும் தமிழ்நாடு எல்லையில் உள்ள புளியரை சோதனைச் சாவடியை வணிக வரி, காவல் மற்றும் போக்குவரத்து (R.T.O.) ஆகிய துறைகளைச் சேர்த்து ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் புளியரை கிராமத்தில் திருநெல்வேலி கோட்டத்தின்கீழ் வணிக

2021 பிப்ரவரி 26]

வரித் துறைக்குச் சொந்தமான சோதனைச் சாவடி இயங்கி வந்தது. 1–7–2017 முதல் அமலாக்கம் செய்யப்பட்டுள்ள சரக்கு மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் சோதனைச் சாவடி அமைக்க சட்ட விதிகள் இல்லாததால், தமிழ்நாட்டில், வணிக வரித் துறைக்குச் சொந்தமான சோதனைச் சாவடிகள் அனைத்தும் 30–6–2017 நள்ளிரவு முதல் செயல்படவில்லை. எனவே, அனைத்துச் சோதனைச் சாவடிகளையும் போக்குவரத்துத் துறைக்கு மாற்றுமாறு அத்துறையின் ஆணையர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, செயல்படாமல் இருந்த வணிக வரித் துறைக்குச் சொந்தமான புளியரை சோதனைச் சாவடி உள்ளிட்ட அனைத்துச் சோதனைச் சாவடிகளும் போக்குவரத்துத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. எனவே, புளியரையில் உள்ள சோதனைச் சாவடியை வணிக வரித் துறை, காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மூன்று துறைகளையும் சேர்த்து, ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியாக மாற்றுவதற்கான சூழ்நிலை எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இருக்கையில் இல்லை.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2)@

(இ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 3 மற்றும் 4)@@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

@ *145 முதல் 258 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

@@ *259 முதல் 523 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.*